**திரப்பனே பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திரப்பனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திரப்பனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,024,666 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | பாதிடப்பட்ட வருமானம் சீர்செய்யப்படாமையினால் குறித்த வேறுபாடு தோன்றியுள்ளது. | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை முத்திரை தீர்வை ரூபா.3,555,950 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திருத்தப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா.14,524,521 ஆக காணப்பட்டது இருப்பினும் குறித்த செலவு காசுப்பாச்சல் கூற்றில் முதலீடு நடவடிக்கையின் கீழ் ரூபா.27,117,145 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றேன். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் எல்.டீ.எஸ்.பீ (LDSP) செயற்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட கட்டடங்களின் பெறுமதி ரூபா.142,694 ஆல் குறைத்துக்காட்ப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டடம் தொடர்பான பிடிகாசு ரூபா. ரூபா.142,698 ஆல் குறைத்துக்காட்ப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுகள் ரூபா.51,537 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டுள்ளது. | 2020 இல் கட்டடங்களுக்கான பெறுமானத்தேய்வு மதிப்பிடப்படவில்லை ஏனைய சொத்துக்களுக்கு சரியாக மதிப்பிடப்பட்டுள்ளது | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போதுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது ரூபா.719,342 பெறுதியான 06 விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளமுடியவில்லை. | நீண்ட காலமாக குறித்த மீதிகள் காணப்படுகின்றன எதிர்காலத்தில் இவற்றை திருத்துகின்றேன். | உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும் |
| (இ) | காசுப்பாச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் இணக்கம் செயற்பாடடின் மூலம் ரூபா.483,899 குறைப்பு செய்யப்பட்டிருந்தது இருப்பினும் இது தொடர்பாக உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய் செலவினம் ரூபா.5,198,874 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய் செலவினம் ரூபா.13,771,043 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **(i)** | வீதவரியும் வரியும் | 908,200 | 830,738 | 796,362 | 211,009 | 1,003,200 | 755,685 | 1,228,655 | 176,633 |
| **(ii)** | வாடகை | 6,283,000 | 3,592,075 | 3,023,262 | 659,005 | 4,101,600 | 4,196,210 | 4,552,088 | 90,192 |
| **(iii)** | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 3,508,000 | 1,533,050 | 3,200,708 | 98,382 | 5,320,300 | 2,645,891 | 3,538,500 | 1,766,040 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 7,202,990 | 3,647,962 | 4,933,918 | 2,764,422 | 5,375,800 | 3,535,816 | 2,655,771 | 4,050,378 |
| | மொத்தம் | **17,902,190** | **9,603,825** | **11,954,250** | **3,732,818** | **15,800,900** | **11,133,602** | **11,975,014** | **6,083,243** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பிரதேச சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிலுவை கழிவகற்றல் வரிகள் மற்றும் ஏக்கர் வரிகளை ரூபா.211,009 இனையும் நிலுவையாகவுள்ள வாடகை வருமானம் ரூபா.659,005 மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானம் ரூபா.98,382 இனையும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,919,915 மற்றும் முத்திரை தீர்வை ரூபா.3,564,950 மீளாய்வாண்டுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிலுவை அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையாகவுள்ள நீதிமண்ற கட்டணம் மற்றும் முத்திரை வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்ம கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திண்ம கழிவு முகாமைத்துவதிற்காக ரூபா.3,079,560 செலவு செய்யப்பட்ட போதிலும் ரூபா.193,600 இற்கு மட்டுமே சேதனைப்பசளை விற்பனை இடம்பெற்றுள்ளது. இதன்படி உக்காத கழிவுகள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவு முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கழிவு முகாமைத்துவம் முறைமைப்படுத்தபட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபைக்குச் சொந்தமான நான்கு (04) வாகனங்கள் பயன்படுத்தப்படாதுள்ளது. | டிப்பர் வாகனம் திருத்தப்பட்டுள்ளது ஏனைய வாகனங்கள் திருத்தமுடியாதுள்ளது. | வாகனங்களை பயன் படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |